உ

ஸ்ரீலக்ஷ்மீவேங்கடேசாயநம:

திருவேங்கடமுடையான்

பக்திரஸ

பஜனைகீர்த்தனை

OFFICE OF ... 31 MAR 1939 MADRAS



V. S. எத்திராஜு முதலியார்

அவர்களால் இயற்றப்பட்டு

திருப்பதி கோல்டன் பவர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1939.

காபி ரைட்

[இதன் விலை] [0-1-0

உ

ஸ்ரீலக்ஷ்மீவேங்கடேசாயநம:

திருவேங்கடமுடையான்

பக்திரஸ

பஜனைகீர்த்தனை



V. S. எத்திராஜு முதலியார்

அவர்களால் இயற்றப்பட்டு

திருப்பதி கோல்டன் பவர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1939.

காபி ரைட்

இதன்விலை] [0-1-0

31 MAR 1939
MADRAS

உ

ஸ்ரீலக்ஷ்மிவேங்கடேசாயநம:



திருவேங்கிட முடையான் பக்திரச
பஜனை கீர்த்தனை

துதி,

கோவிந்தா என்று ஒருதரம் சொன்னால்
கோடிபாவங்கள் போகும் மனமே
மறவாமல் தினம் அவனை யேநாடு.

விருத்தம்

திருப்பதி திருமலையில் வருஷத்திர்கு ஒருதரம்
புரட்டாசி மாதம் தன்னில்
தேவர்களும் முனிவர்களும் சிறப்பாகதிருவிழா
அன்புடன் துதிசெய்யவும்
அன்பாக வேதியர்கள் வேதகோஷ்டத்துடன்
பணிந்துனை போற்றி செய்ய
பலவித புஷ்பவகை மாலைகள் சாற்றியே
பரிமளஞ் சூழ்ந்துவீச
சிந்தையில் உன்னையே கண்டு சேவிக்க
தேசத்து பலஜனங்கள்
செப்பிய கீர்த்தனை செலுத்தியே
உன் அடிதொழுது அன்புடன் வந்துநிற்க
அலுமேலு மங்கையை மார்பில் அணியும் தேவனே
எனக்கு நேர்ந்த வினையை திர்த்தருளுவாய்
ஜகமதில் அடியார்கள் மனதில் உறைபவனே
சீனிவாசப் பெருமானே

ராகம் கமாஸ்.

பல்லவி

வேங்கடவனை நினைப்பாய், மனமே தினம் தினம் (வே)

சரணம்.

வேங்கட வனைக்கண்டால்
வேண்டிய வரம் கிடைக்கும்
வேங்கடவனைக் கண்டால்
உன்பாவங்கள் பரந்தோடும் (வே)

வேங்கட வனைப் போல
வேறொரு தெய்வம் இல்லை
வேங்கட வனைப்போல்
வேறு எங்கும் கண்டதில்லை (வே)

இகத்திற்கும் பரத்திற்கும்
இன்பம் சுகம் கிடைக்கும்
இன்றுவரையில் செய்த
பாவங்கள் பரந்தோடும் (வே)

பிறவிக்கடலில் இருந்து
பிரிந்திடுவோம் நாம்
பிணிமூப்பு துன்பமதை
இனிமறந்திடுவோம்நாம் (வே)

காமக் கடலில் இருந்து
கரை ஏற்றுவாய்நீ
காதகன் எந்தனை
காப்பாற்றுவாய்நீ (வே)

கலியுக வைகுண்டம்
கண்டு மகிழ்வாய்நீ
கண்ணனைக் கண்டால்
களித்திடு வாய்நீ (வே)

திருமலை திருப்பதி
வேங்கட வன்வாழும்
திவ்ய தரிசனத்தை
தினம் தினம் பாரும் (வே)

மாதாட பாராதேனே என்ற வர்ணமெட்டு:

பல்லவி.

வேங்கடேசனே வாராய்
வேண்டினேன் உன்னை நான் (வே)

அனு பல்லவி:

கார்மேனி வண்ணனே
கனகாம்பரரூபா
அம்ச வாகனமேறி
அன்புடனே வருவாய்நீ (வே)

தேவாதி தேவர் போற்றும்
திவ்வியநீலமேக
கருடவாகன மேறி
காப்பாற்று வாய் என்னை (வே)

ஞானக்கண் என்ற வர்ணமெட்டு:

திருமலை கண்டவுடன் போதினிலே
தீங்குகள் பலதும் செய்தேன் திருவேங்கிடவா ஆதரிப்பாய் (திரு)

சரணம்:

கலியுக வைகுண்டமும் கண்முன் என்னெதிரிலே
கரிவரதன் வுருவம் கண்முன் தெரிவதாலே (திரு)

ரார ராக்ஷஸ ஹரண என்ற வர்ண மெட்டு:

வருவாய் - வரந்தருவாய்
வரதா - வரதா (வரு)

சரணங்கள்:

கோவிந்தா இவ்வேளை
கோரினேன் வுன்னைநானே
கருடவாகன மேறி காப்பாற்றவாய் என்னை (வரு)
ராக்ஷஸ சம்மாரா
ரகுநாதா ரகுவீரா
ரக்ஷிப்பாய் எந்தனை பக்ஷமுடன் இவ்வேளை (வரு)

இந்துஸ்தான் தோடி ராகம்.

வுன்னைவிட வேறுதெய்வ மில்லையே
ஈசா - ஜகதீசா கைலேநேசா, சீனிவாசா (உ)

சரணம்:

திருப்பதிமலை பேரில்
சிங்காரமாய் வீற்றிருக்கும்
சேஷவாகன மேறி
சீக்கிரம் என்னை காப்பாற்றுவாய் (உ)

காரணனே வந்துதித்தாய் ராமா ராமா என்ற வர்ண மெட்டு:

அலர்மேலு மங்கை அம்மா ஆதரிப்பாய்
அன்புடனே வுனைப்பணிந்தேன் பாராய் பாராய் (அ)
பாலகன்நான் பட்டகஷ்டம் கேளாய் கேளாய்
பலவிதஜென்மங்கள் நானும் எடுத்தேன் (அ)
இப்பிறவியில் நானும்துன்பம் பட்டேன் பட்டேன்.
எப்பிறவியும் வேண்டாம் அம்மா எந்தன் தாயே (அ)

ராகம் - ஆதிதாளம்:

திருப்பதி வேங்கடேசா

அனுபல்லவி:

உந்தன் திருவடியை அனுதினம்
போற்றுகிறேன் பொற்பாதா (தி)

சரணம்:

தாரக பிரம்மமாய்
தரணியில்வந்து தித்தவா
இகத்திற்கும் பரத்திற்கும்
இன்பத்தை அளித்தவா
பாரத மக்களுக்கு
பக்தியை கொடுத்தவா
பரந்தாமா வுனைவேண்டி னேன்
பாலகனை காப்பாற்றுவாய் (திரு)

கார்மேனி செங்கனே
கண்ணனே முகில் வண்ணனே
கருணையுக் கடலே
கரிவரதப் பெருமானே (திரு)
கானகந்தனில் அலேந்தேன்
வுனைக்காண வேண்டிநானே
காப்பாற்றுவாய் என்னை
சீனிவாசப் பெருமாளே (திரு)

இந்துஸ்தான் ராகம்:

ஹரேராம் - ஹரேராம்
ராம ராம ஹரே ஹரே
ஹரேகிருஷ்ண, ஹரேகிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே (ஹரே)

ராகம் இந்துஸ்தான் தோடி:

கோவிந்த நாமகரே
ஹரே - பைய்யா (கோ)
பாலாஜிகி நாமம்
பஜன்கரோ சதா (கோ)
போலோ கோவிந்தநாம்
சதா பஜன்கரோ (கோ)

ராகம் கமாஸ்:

காப்பாற்று வாய்நீயே
அச்சுதா காப்பாற்றுவாய்நீயே (கா)

சரணம்:

அச்சுதா கோவிந்தா, ஆதரிப்பாய் வைகுந்தா
மச்சாவதாரா மாயரூபாவுனை வேண்டி னேன் (கா)
தேவாதி தேவர் போற்றும் திவ்விய நீலமேகா
கம்சனேயும் மாய்த்த கமலக்கண்ணா காக்கவருவாய் (கா)

எத்தனை தூரமோ அறியேன் திருமலை
அறியேன் திருமலை –தெரியேன்–ஏழுமலை (எ)

கால்களும் நோகுதே
கடும்பசி ஆகுதே
கோவிந்தனைக்காண
மனமும் நாடுதே (எ)
கோவிந்தா என்ற சப்தம்
கோடியில் கேழ்க்குதே
கண்டாமணி ஓசை
கானகத்தில் கேழ்க்குதே (எ)
மாயாவதாரன் வாழும்
மலைஇது தானோ
மகிழ்வாய் அவனை
எப்பொழுது காண்பேனோ (எ)

இராகம் வசந்தகம் தாளம் ரூபகம்.

பல்லவி.

கருடன்ஏறினார் ஸ்ரீவெங்கடேஸ்வரர்
ஒய்யாரமான கருடன்ஏறினார் (கரு)
அழகு ஆபரணங்கள்பூட்ட
நாரணன்முடிதனை காட்ட
நாரதர் வீணையைமீட்ட
ரம்பையர் அபிநயனங்காட்ட (கரு)
இந்திரன் மலர்கொண்டுதூற்ற
இமையவர் சிரம்வணங்கிபோற்ற
சாதுக்கள் அடிபணிந்துசாற்ற
வந்தனஞ்செய்தவர்கோடி
வையகந்துதிக்குமேநாடி
சுந்திரமாதர்கள்கூடி
சொகுசுடன் துதிப்பார்தேடி (கருட)
வெண்சாமரம்வீச அன்பர்
வேதகோஷ்டமோததொண்டர்
பண்பா இசைப்பாடதாசர்
பரமனைக்கொண்டாடுவார் நேசர்
பாலன் பார்த்து கொண்டாட
பணிந்தவர் பாவங்கள்ஓட
சங்கரி தமயனைநாட (கருட)

சந்திரசேகரன் கண்டுகளிக்க
சப்தரிஷிகள் சேர்ந்து துதிக்க
கந்திருவர்கள் கண்டுமகிழ
காலில்தண்டைமிக ஜொலிக்க (கருட)
காதினில் குண்டலமின்ன
கைதனில் சங்குமேதுலங்க
ஜோதியும் பளபளவென்ன
சத்தியாய் பக்தர்கள்பனிய (கருட)

வேறு—தாளம் ஆதி.

வந்தாரே வெங்கடேசர் ஏழுமலையைவிட்டு (வந்)
துளசிமணிகள்மின்ன ஜோதிபளபளென்ன
களபகஸ்தூரி கருடன் கண்ணன்கருடநேரி (வந்)
மறையவர்கள்துதிக்க மானிலங்கள்செழிக்க
குறைகள்யாவும் போக்கி கோரினவரைகாக்க (வந்)
காதில்குண்டலமாட கண்டதாஸர்கொண்டாட
ஆதிவைகுந்தம்நாட அமரர்கள் எங்கும்தேட (வந்)
காலகாலன் கண்கூசகவுத்துவம்ஒளிவீச
பாலன்பக்தன்பேச மாயன்கருடனேரி (வந்)

திருமலையில் வீற்றிருக்கும் திருவேங்கடவா போற்றி
திருச்சாநூரில் வுள்ள திருமங்கைதாயே போற்றி
அன்புடன் எத்திராஜன் பாடிய இக்கீர்த்தனையும்
ஜகமெங்கும் புகழ்ந்தோங்க நின்தாள் போற்றி போற்றி.

சுபம். சுபம். சுபம்.

திருவேங்கிடப் பெருமான்

பத்திரச கீர்த்தனை

முற்றிற்று.

அறிவிப்பு.

கலியுகவைகுண்டம் என்னும் திருமலைதிருப்பதி வெங்கடேச க்ஷேத்திரமகிமை இந்த புஸ்தகத்தில் திருமலையின் பேரிலும், கீழ்திருப்பதியிலும் யாத்ரீகர்கள் தங்கவேண்டிய இடம், சத்திரங்கள் முதலான விவரங்களும், ஸ்ரீ திருமலையில் ஸ்ரீ பெருமாளுக்கு கோவிலில் நடக்கும் நித்தியப்படி கட்டவேண்டிய சுவாமிசேவையின் விவரமும் திருமலையில்வுள்ள தீர்த்தங்களும், அதன் மகிமைகளும், ஸ்ரீவேங்கடேஷ்வர சுவாமிக்கு புரட்டாசி மாதத்தில் நடக்கும் 10 நாள் பிரம்மோற்சவவைபவமும், எளியதமிழ்நடையில் யாவரும் தெரிந்துக் கொள்ளும்படி எழுதியிருக்கிறது.

V. S. எத்திராஜு முதலியார் அவர்களால் இயற்றப்பட்டது.
திருமலைக்கு வரும் ஒவ்வொர் பக்தனும் அவசியம் பார்க்கத்தகுந்தது.

இதன் விலை அணா 0-5-0.

ஸ்ரீ ராமச்சந்திர தெய்வம்.

விலக்ஷணானந்தர் திருவாய் மலர்ந்தருளியது. சம்பூர்ண ராமாயணமும் 100 பாசுரங்களாக இயற்றப்பட்டு இருக்கிறது. பக்தர்களின் பாராயணத்தின் பொருட்டு மிகவும் வுபயோகமானது.

ஞானி வுயர்ந்த ஜாதி

அஞ்ஞானி தாழ்ந்த ஜாதி

பிரஹ்ம சாக்ஷாத்காரம்

ஜனன மரண நிவர்த்தி

முதலியவைகளை விளக்கிகாட்டி ஞானத்தை வுண்டாக்கும் நூல்.
ஒவ்வோர் பக்தனும் அவசியம் படிக்கத்தகுந்தது.

விலை -0

கிடைக்குமிடம்:—

[illegible]